செ.வெ.எண்.187/2020 நாள்: 28.02.2020

**கோமாரி நோய் தடுப்புத்திட்டம் NADCP முதல் சுற்று கால் மற்றும் வாய்நோய் தடுப்பூசி பணி நடைபெறுகிறது - மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் மு.வடநேரே இ.ஆ.ப., அவர்கள் தகவல்**

கன்னியாகுமரி மாவட்டத்தில் NADCP முதல் சுற்று கால் மற்றும் வாய்நோய் தடுப்பூசி பணி 28.02.2020 முதல் 19.03.2020 முடிய 21 நாட்கள் நடைபெறவுள்ளது. இச்சுற்றில் சுமார் 70,000 கால்நடைகளுக்கு தடுப்பூசிபோட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேலும் கால்நோய் மற்றும் வாய்நோய் தடுப்பூசி பணி 21 நாட்களும் காலை 6 மணி முதல் 9 மணி வரையிலும் பிற்பகல் 3 மணி முதல் 5 மணி வரையிலும் நடைபெறும்.

கால்நோய் மற்றும் வாய்நோய் பெரும்பாலும் கலப்பின கால்நடைகளில் இரட்டை குளம்புகள் கொண்ட கால்நடைகளை தாக்கி கால்நடை வளர்ப்போருக்கு பொருளாதாரம் மற்றும் உற்பத்தி இழப்பை ஏற்படுத்தும் நோய் ஆகும்.

**இந்நோய் தாக்குதலினால்**

- கறவை மாடுகளின் பால் உற்பத்தி குறைகிறது.
- எருதுகளின் வேலை செய்யும் திறன் குறைகிறது
- கறவை மாடுகள் சினைபிடிப்பது குறைகிறது
- இளம் கன்றுகளின் இறப்பு நேரிடுகிறது

இந்நோயிலிருந்து முற்றிலுமாக கால்நடைகளை பாதுகாப்பதற்கு 28.02.2020 முதல் 19.03.2020 முடிய 21 நாட்கள் NADCP முதல் சுற்று கால்நோய் மற்றும் வாய்நோய் தடுப்பூசி நமது மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் கால்நடை பராமரிப்பு துறையினரால் பல்வேறு குழுக்கள் மூலம் போடப்படுகிறது.

இத்திட்டத்தின் NADCP முதல் சுற்று தடுப்பூசி பணி 28.02.2020 அன்று மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் வைத்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் கால்நடை பராமரிப்புத் துறை, மண்டல இணை இயக்குநர் (கூ/பொ), மரு.பா.நடராஜகுமார், நாகர்கோவில் கோட்ட உதவி இயக்குநர் மரு.சி.நோபிள் மற்றும் தக்கலை கோட்ட உதவி இயக்குநர் மரு.ஆர்.ரிச்சர்டுராஜ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

எனவே கால்நடை வளர்ப்போர் இத்தருணத்தை பயன்படுத்தி எவ்வித விடுபாடுமின்றி தங்கள் கால்நடைகளுக்கு தடுப்பூசிப் போட்டுக் கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் மு.வடநேரே, இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொள்கிறார்கள்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்